

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 15.01.2026


# தமிழர் தம் பெருநாள்!

**“தைஇத் திங்கள் தண்கயம் படியும்”** என்று நற்றிணையும் -

**“தைஇத் திங்கள் தண்ணிய தரினும்”** என்று குறுந்தொகையும் -

**“தைஇத் திங்கள் தண்கயம் போல்”** என்று புறநானூறும்-

**“தைஇத் திங்கள் தண்கயம் போல”** என்று ஐங்குறுநூறும்-

**“தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ”** என்று கலித்தொகையும்

– பாடும் பெருவிழாதான் பொங்கல் திருவிழா.

முதலாம் இராசேந்திரன் காலத்து திருவொற்றியூர் கல்வெட்டில் ‘புதியீடு விழா’ எனப் பொங்கலைக் குறிக்கிறது. புதியீடு என்பது முதல் அறுவடை எனப்படும். சீவகசிந்தாமணியில், ‘மங்கையர் வளர்த்த செந்தீப் புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்’ என்று வருகிறது. தை நீராடல், தைப் பொங்கல், புதியேடு என இது இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது. சோழர் காலத்தில் புதியேடு என்றே வழங்கப்பட்டுள்ளது.

**உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை**
**முந்துவிளை யாணர் நாள்புதிது உண்மார்,**
**மரையான் கறந்த நுரைகொள் தீம்பால்,**
**மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி**
**வான்கேழ் இரும்புடை கழாஅது, ஏற்றிச்,**
**சாந்த விறகின் உவித்த புன்கம்,**
**கூதளங் கவினிய குளவி முன்றில்,**
**செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்**
**ஊராக் குதிரைக் கிழவ! கூர்வேல்,**
**நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி,**
**வடிநவில் அம்பின் வில்லோர் பெரும!**

என்று புறநானூற்றில் 168 ஆவதாக இடம்பெறுகின்ற பாடலிலே கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் என்ற புலவர் புதிர் உண்ணுகின்ற செய்தியைப் பதிவு செய்துள்ளார். கேழல் உழுத புழுதியிலே விதைத்த திணையும் விளைந்து கதிர் முற்றியது. நல்ல நாளிலே பாலை உலைநீராக்கிச் சந்தன விறகால் எரித்து, அத்தினையைச் சமைத்து, அகன்ற வாழை இலையிலே பலரோடும் பகுத்துண்ணும் வளமுடைய குதிரைமலைத் தலைவனே என்று சொல்கிறது இப்பாடல்.

**“புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்**
**பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து”** என்கிறது சிலப்பதிகாரம். புழுக்கல் என்றால் பொங்கல்.

மணிமேகலை காப்பியத்தில், இந்திர விழா என்ற பெயரில் பொங்கல் கொண்டாடப்பட்டது. அக்காலத்தில், காவிரி பூம்பட்டினத்தில், மன்னர்கள், மக்களுக்கு முரசறைந்து, பொங்கல் விழா வரவிருப்பதை அறிவிப்பார்கள். அக்காலத்தில் பொங்கல் விழா இருபத்தெட்டு நாட்கள் வரை நடந்திருக்கிறது.

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை** – என்கிறார் வள்ளுவர். எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் உழவுக்கு அடிப்படையான ஏர் தான் இந்த உலகுக்கே அடிப்படை என்கிறார் வள்ளுவர். இதுதான் பொங்கல் திருநாளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

விதைத்ததை அறுவடை செய்து பயன்பெறும் தை மாதத்தின் தொடக்கமே பொங்கல். புதிய அரிசியை புதுப்பானையில் போட்டுப் பொங்கி சூரியனுக்கும் பூமிக்கும் படையலிட்டுத் தொடங்கும் மாதம் இது. மண்ணின் விளைச்சலில் கிடைக்கும் அனைத்துக் காய்கறிகளும் படையலாக வைக்கப்படுகின்றன. அறுவடைக்குத் துணை புரிந்த மாடுகளாம் அனைத்து உயிரினங்களையும் வணங்கும் நாள் இது.

‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்’ என்று கலித்தொகை ஒரு விளக்கம் தருகிறது. அத்தகைய பண்பாட்டை அடையாளப்படுத்தும் விழாதான் பொங்கல் திருவிழா.

**“தமிழ்நாட்டின் பெரும் நிலப்பரப்பு விவசாயம் சார்ந்த உற்பத்தி முறைக்கு ஏற்றதாக இருந்ததால் தமிழ்ச் சமூகம் வேளாண்மை சார்ந்த நிலவுடைமைச் சமூகமாக உருப்பெற்றது. விவசாய நிலங்களின் பண்பாடு மற்ற திணைக்குரிய சிறுபான்மை நிலப்பகுதிகளிலும் தாக்கம் செலுத்தியது. எனவே மருதத் திணையில் அறுவடைக் காலக் கொண்டாட்டங்கள் மற்ற திணை சார்ந்த மக்களிடம் பரவியது. இதனால் மருத நில மக்களின் அறுவடைக் கொண்டாட்டமான பொங்கல் விழா தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பண்பாட்டின் அடையாளமாக மாறியது. இப்பொங்கல் விழாவுடன் தொடர்புடைய பண்பாட்டுக் கூறுகள் தமிழர்களின் அடையாளங்களாக நிலைபெற்றன”** என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். அந்த வகையில் ஒட்டுமொத்த தமிழர் தம் பெருவிழாவாக இது அமைந்து விட்டது.

பொங்கு என்றால் பொங்குதல், கொதித்தல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்குவதால் பொங்கல். தமிழர்கள் இனக்குழுவாக இருந்த காலம் முதல் நடத்தப்படும் திருவிழா இது. இயற்கையை வணங்குதல் என்பதே இதன் உள்ளடக்கமாக இருந்தது.

அதே உணர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் தான் இப்போதும் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. இக்காலத்தில் மண் செழித்துள்ளது. விளைச்சல் அதிகரித்துள்ளது. பாசனப்பரப்பு அதிகரித்துள்ளது. உற்பத்தி அதிகமாகி உள்ளது. வறட்சி என்பதே இல்லை. மழை, பருவத்தே பெய்து வருகிறது. உழவர்கள் மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் இருக்கிறார்கள். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற உன்னதமான நோக்கம் கொண்டவராக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருவதால் அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வாழ்கிறார்கள்.

**தமிழ் நாட்டு மக்கள் அனைவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் பொங்கும் வகையில் பொங்கல் பரிசு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3,000 பொங்கல் பரிசுத் தொகை என்ற முதலமைச்சரின் அறிவிப்பு இந்த ஆண்டின் தொடக்கத்தையே மகிழ்ச்சிக்குரிய தாக மாற்றி இருக்கிறது. தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடிட இப் பரிசுத் தொகை வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு உள்ளார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெற்றுள்ளார்கள்.**

இப்பொங்கல் காலத்தில்தான் ஏறுதழுவுதல் என்ற விளையாட்டுப் போட்டிகளும் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அவை பண்பாட்டின் அடையாளங்களாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய பண்பாட்டு விளையாட்டை நடத்துவதற்காக மதுரையில், ‘கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்’ கட்டி எழுப்பப்பட்டுள்ளது. தமிழர் தம் பெருமையை நிலைநாட்டும் வகையில் கீழடி, பொருநை அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொங்கல் விழாவை கலை விழாக் காலமாக, குறள் விழாக் காலமாக மாற்றி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**ஞாயிறு போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும்**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.1.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, பொங்கல் வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ரூ.3291 கோடி மதிப்பில் செயல்படுத்திவரும்

# தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்களின் முன்னேற்றம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**சென்னை, ஜன.15-**

**தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் முத்திரை திட்டங்களின் (Iconic Projects) முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 13.01.2026 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசின் முத்திரை திட்டங்களின் (Iconic Projects) முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைச் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாநிலத்தின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு அரசு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் பெரிய அளவிலான பயன்தரக்கூடிய உள்கட்டமைப்பு திட்டங்க ளான முத்திரைத் திட்டங்களை குறித்த காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்கும், பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் அத் திட்டங்களின் முன்னேற்றத்தினைத் கண்காணித்திடவும் தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள் முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் அரசு தலைமைச் செயலாளர் ஆகியோரால் நடத்தப்பட்டு வருகிறது.

**அடையாளம் காணப்பட்ட 288 முத்திரைத் திட்டங்கள்**

அரசின் 24 நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த சுமார் 3,17,693 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 288 திட்டங்கள் முத்திரைத் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டு அதன் செயல்பாட்டினை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் 85 திட்டங்கள் இதுவரை முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**முதலமைச்சர் முத்திரைத் திட்டடங்கள் குறித்த ஆய்வு**

கடந்த 22.12.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், 6 துறைகளைச் சார்ந்த சுமார் 87,941 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைச் செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக 30.12.2025 அன்று மேலும் 6 துறைகளைச் சார்ந்த சுமார் 58,740 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (13.01.2026) நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு மற்றும் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் ஆகிய 6 துறைகளைச் சார்ந்த சுமார் 3,291 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான செயல்பாட்டில் உள்ள 27 முத்திரைத் திட்டங்களின் பணி முன்னேற்றத்தினை முதலமைச்சர் அவர்கள் தொடர்புடைய துறைச் செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

**மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஒலிம்பிக் அகாடமி. செங்கல்பட்டில் மாவட்ட விளையாட்டு மையம் மற்றும் இராமநாதபுரத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு**

இவ்வாய்வு கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கீழ் மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஒலிம்பிக் அகாடமி, செங்கல்பட்டு மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு மையம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி அமைக்கும் பணிகள் பிப்ரவரி 2026-க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

2030-ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்கம் வெல்லுகின்ற வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சியினை வழங்கிட வேண்டுமென தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு உரிய அறிவுரைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**கடம்பூரில் பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா, மரக்காணத்தில் சர்வதேச பறவை மையம், கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் சதுப்புநில பாதுகாப்பு மையம், தஞ்சாவூரில் சர்வதேச கடல் பசு பாதுகாப்பு மையம், சென்னையில் கடல் ஆமை பாதுகாப்பு மையம் மற்றும் திண்டுக்கல்லில் தேவாங்கு பாதுகாப்பு மையம் அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு**

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கீழ் கடம்பூரில் பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா, மரக்காணத்தில் சர்வதேச பறவை மையம், கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் சதுப்புநில பாதுகாப்பு மையம், தஞ்சாவூரில் சர்வதேச கடல் பசு பாதுகாப்பு மையம் மற்றும் சென்னையில் கடல் ஆமை பாதுகாப்பு மையம் அமைப்பதற்காக பிப்ரவரி, 2026 இரண்டாம் வாரத்திற்குள் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவங்கப்பட வேண்டுமெனவும், மேலும் திண்டுக்கல்லில், தேவாங்கு பாதுகாப்பு மையம், அமைக்கும் பணி பிப்ரவரி 2026 -க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**கடலூரில் புதிய நூலகம் அமைக்கும் பணி குறித்த ஆய்வு**

பள்ளிக்கல்வி துறையின் கீழ், கடலூரில் புதிய நூலகம் அமைப்பதற்கான ஒப்பந்தப் பணிகளை விரைந்து முடித்து பிப்ரவரி 2026-க்குள் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவங்கப்பட வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**ஆற்காட்டுத் துறை, வெள்ளப்பள்ளம் மீன்பிடி துறைமுகங்கள், மற்றும் திட்டக்குடியில் புதிய கால்நடை தீவன ஆலை அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு**

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் கீழ், ஆற்காட்டுத் துறை, வெள்ளப்பள்ளம் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் திட்டக்குடியில் புதிய கால்நடை தீவன ஆலை அமைக்கும் பணிகள் பிப்ரவரி 2026-க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இதுதவிர, இத்துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் பிற முத்திரைத் திட்டங்களையும் விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அண்ணா நகரில் அதிநவீன ஆதார் சேவை மையம்!

சென்னை, ஜன. 15 –

சென்னை அண்ணா நகர் கிழக்கில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன கட்டிடத்தில் புதிதாக ஆதார் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ஆல்பி ஜான் வர்கீஸ் கலந்துகொண்டு மையத்தைத் திறந்து வைத்தார்.

## சென்னை கே.எம்.சி.யில் புறநோயாளிகளுக்கு அடையாள அட்டை!

சென்னை, ஜன. 15 –

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்கியுள்ளது. மருத்துவமனையில் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத் துறை செயலர் அறிவுறுத்தினார்.

மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் உதவியாளருக்கு ஏற்கெனவே அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அதில் நோயாளி பெயர், வயது, தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும். ஒரு நோயாளிக்கு ஒரு நபர்: தற்போது நோயாளியை சந்திக்க வரும் மற்ற நபர்களுக்கும், நோயாளி சிகிச்சை பெறும் துறை சார்ந்த குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது என்றார்.



சென்னை அமைந்த கரையில் அமைந்துள்ள செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 915 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணா நகர் பகுதிச் செயலாளர்கள் ராமலிங்கம் மற்றும் பரமசிவம், தொகுதி பார்வையாளர் கௌதமன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.